# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



23

அனுப்புநர்
திருமதி. ர. ராணி, பி.இ.,
உதவி இயக்குநர்(பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
க.எண். 6/12,17 பரமத்திரோடு (தெற்குபகுதி),
நாமக்கல் – 637 001.
Phone No : 04286 – 290067
E-mail : dtcp.namakkal@gmail.com

பெறுநர்
நிர்வாக பொறியாளர்,
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம்,
சேலம் கோட்டம்,
சேலம் – 636 007.

ந.க. எண்.1073/2020/நாமா — நாள்.13.01.2021

அய்யா,

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் – நாமக்கல் மாவட்டம் – கொமராபாளையம் வட்டம் – பள்ளிபாளையம் கிராமம்– ஆலம்பாளையம் பேரூராட்சி – சர்வே எண்.378/2–ல் 16200.00 ச.மீ பரப்பு கொண்ட மனையிடத்தில் அமையும் உத்தேச தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் பிளாக் A to C - பிளாக்குளில் தரை தளம் + நான்கு தளங்கள் மற்றும் D to G - தரை தளம் + ஐந்து தளங்களில் 520 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட அனுமதி கோரியது – மனையிட ஒப்புதலும் அம்மனையில் கட்டிடம் கட்ட இசைவும் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.404/SCB/AE(S)/2020, நாள் 28.11.2020. (இவ்வலுவலகத்தால் கடிதம் பெறப்பட்ட நாள் 23.12.2020 மற்றும் 15.12.2020).
2. அரசு ஆணை எண்.86, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (யுடி–4) துறை, நாள். 28.03.2012.
3. அரசு ஆணை எண். 85, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (யுடி.2–2) துறை, நாள். 16.05.2017.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.7486/2009/பிஏ2, நாள் 16.04.2009.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.12201/2017/spl.cell, நாள். 28.09.2017.
6. அரசாணை எண். 135, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 21.07.2017.
7. அரசாணை எண். 79, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 04.05.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.21075/2009/பிஏ1, நாள். 04.04.2012.
9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.14227/2017/சிபி, நாள் 14.12.2017.
10. அரசாணை எண். 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 11.10.2002.
11. அரசு ஆணை (2டி) எண். 38, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ.4(1)) துறை, நாள். 10.02.2020.

--------

20.1.21

நாமக்கல் மாவட்டம், கொமராபாளையம் வட்டம், பள்ளிபாளையம் கிராமம், ஆலம்பாளையம் பேரூராட்சி, சர்வே எண்.378/2–ல் 16200.00 ச.மீ கொண்ட மனையில் அமையும் உத்தேச தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் பிளாக் A to C - பிளாக்குளில் தரை தளம் + நான்கு தளங்கள் மற்றும் D to G - தரை தளம் + ஐந்து தளங்களில் 520 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானம் அமையும் மனையிடத்திற்கு 'A முதல் F வரை' என எல்லையிட்டு ம.வ/ந.ஊ(நாமா) எண்.04/2021 என எண்ணிட்ட மனையிட ஒப்புதலும், அம்மனையில் அமையும் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு க.வ/ந.ஊ(நாமா) எண். 01A, 01B, 01C,01D, 01E, 01F,01G,1H,1I,1J/2021 என எண்ணிடப்பட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொதுவான நிபந்தனைகளுடன் கட்டிட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

EXECUTIVE ENGINEER,
Project Implementation Divison-II,
Tamil Nadu Slum Clearance Board,
SALEM-7.

இறுதி ஒப்புதலை வரைபடங்கள் உட்பட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

13/1/2024

உதவி இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல்.

13/1/24

<u>நகல்</u>
செயல் அலுவலர்,
ஆலம்பாளையம் பேரூராட்சி,
பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம்,
குமாரபாளையம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

Executive Engineer
Project Implementation Division-II,
Tamil Nadu Slum Clearance Board,
Salem-7.

EXECUTIVE ENGINEER,
Project Implementation Divison-II,
Tamil Nadu Slum Clearance Board,
SALEM-7.

# ஆலாம்பாளையம் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை – திரு.எம்.எஸ்.சண்முகம் எம்.எஸ்.சி.,

ந.மு.எண். 35 / 2021

நாள். 05.02.2021

பொருள்: அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் – கட்டிட வரைபட அனுமதி – பேரூராட்சி நிர்வாகம் – ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி – புல எண் 378/2ல் – 16200 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனையிடத்தில் – தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் – தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம் கொண்ட 7 பிளாக்குகளில் 520 குடியிருப்புகள் கட்டிடத்திற்கு – நகர் ஊரமைப்பு துறையினரால் திட்ட அனுமதி வழங்க தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டது – கட்டிடத்திற்கு அனுமதி உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடித நாள்.03.12.2021
2. ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி தனி அலுவலர் அவர்களின் தீர்மானம் எண். 469, நாள். 11.12.2020
3. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் (பொ) நாமக்கல் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண். 1073/2020/நாமா, நாள். 13.01.2021
4. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடிதம் எண் 94/A4/PIU-II/2020 நாள்.20.01.2021
5. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் ந.க.எண். 35/2021 நாள். 29.01.2021
6. நிர்வாக பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், சேலம் கோட்டம் அவர்களின் கடித எண். 22/அ1/2021 நாள்.03.02.2021 மற்றும் 04.02.2021

* * * * *

**உத்தரவு :**

நாமக்கல் மாவட்டம், ஆலாம்பாளையம் பேரூராட்சி, பள்ளிபாளையம் கிராமம், புல எண். 378/2–ல் 16200 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட மனை நிலத்தில் தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம் ஆகிய தளங்களில் 7 பிளாக்குகள் கொண்ட 520 குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்க பார்வை 1ல் காணும் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதை தொடர்ந்து, பார்வை 2ல் காணும் விபரப்படி இப்பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தரை தளம், முதல் தளம், இரண்டாம் தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம் ஆகிய தளங்களில் 7 பிளாக்குகள் கொண்ட 520 குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி வழங்க இறுதி ஒப்புதலை உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள தெரிவித்து, பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவில் மேற்படி கட்டிடத்திற்கு திட்ட அனுமதி வழங்க தொழில் நுட்ப இசைவு வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

| கட்டிட பரப்பு | Block "A" | Block "B" | Block "C" | Block "D" | Block "E" | Block "F" | Block "G" | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| குடியிருப்பு பகுதி (சதுர மீட்டரில்) | | | | | | | | |
| தரைதளம் | 685.26 | 357.37 | 365.13 | 574.71 | 685.26 | 689.40 | 357.37 | 3714.50 |
| முதல்தளம் | 685.26 | 357.37 | 365.13 | 574.71 | 685.26 | 689.40 | 357.37 | 3714.50 |
| இரண்டாம் தளம் | 685.26 | 357.37 | 365.13 | 574.71 | 685.26 | 689.40 | 357.37 | 3714.50 |
| மூன்றாம் தளம் | 685.26 | 357.37 | 365.13 | 639.41 | 685.26 | 689.40 | 357.37 | 3779.20 |
| நான்காம் தளம் | 685.26 | 357.37 | 365.13 | 605.40 | 685.26 | 689.40 | 357.37 | 3745.19 |
| ஐந்தாம் தளம் | - | - | - | 605.40 | 685.26 | 689.40 | 357.37 | 2337.43 |
| மொத்தம் | 3426.3 | 1786.85 | 1825.65 | 3574.34 | 4111.56 | 4136.4 | 2144.22 | 21005.32 |

வணிக உபயோக பகுதி (சதுர மீட்டரில்)

| | Anganvadi Block | Library | Ration Shop | Convenience Store | Total |
|---|---|---|---|---|---|
| தரைதளம் | 98.57 | - | 49.95 | 55.12 | 203.6 |
| முதல்தளம் | 151.46 | - | - | - | 151.46 |
| இரண்டாம் தளம் | 105.07 | 80.63 | - | - | 185.70 |
| மூன்றாம் தளம் | - | 80.63 | - | - | 80.63 |
| மொத்தம் | 355.10 | 161.26 | 49.95 | 55.12 | 621.43 |

மொத்த அளவீடுகள்

| | |
|---|---|
| குடியிருப்பு பகுதி | 21005.32 சதுர மீட்டர் |
| வணிக உபயோக பகுதி | 621.43 சதுர மீட்டர் |
| மொத்தம் | 21626.75 சதுர மீட்டர் |

தபியா.

Executive Engineer
Project Implementation Division-II,
Tamil Nadu Slum Clearance Board,
Salem - 7.

மேலும், பார்வை 5ல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி பெறுவதற்கு உரிய தொகைகளை செலுத்தி அனுமதி பெற்றுக் கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பார்வை 6ல் காணும் விவரப்படி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டிட உரிம கட்டணமாக தொகை ரூ.36,17,285/- (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து பதினேழாயிரத்து இருநூற்று எண்பத்து ஐந்து மட்டும்)-க்கான (வரைவோலை எண். 035713, நாள். 03.02.2021 HDFC வங்கி, சேலம் கிளை) வரைவோலை பெறப்பட்டுள்ளது. மேலும், வணிக உபயோக கட்டிடத்திற்கான நன்னிலை வரி ரூ.1,16,936/- (ரூபாய் ஒரு இலட்சத்து பதினாறாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு மட்டும்)-க்கான சலாண் மூலம் திருச்செங்கோடு சார்நிலை கருவூலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, பார்வை 3ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் தொழில் நுட்ப உத்தரவின்படியும், பார்வை 2ல் காணும் ஆலாம்பாளையம் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையிலும், 7 பிளாக்குகள் (தரைதளம், முதல் தளம், இரண்டாம்தளம், மூன்றாம் தளம், நான்காம் தளம் மற்றும் ஐந்தாம் தளம்) (G+4 மற்றும் G+5) 520 குடியிருப்புகள் கொண்ட தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய கட்டிடத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கட்டிட வரைபடத்தில் கண்டுள்ளவாறு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண் 1073/2020/நாமா, நாள். 13.01.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்குட்பட்டும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்திற்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1) இந்த அனுமதி 05.02.2021 முதல் 04.02.2026 வரை ஐந்து வருட காலத்திற்கு செல்லத்தக்கதாகும் (தமிழ்நாடு அரசிதழ் எண். 86, பகுதி IV பிரிவு 2, பக்கம் எண். 61, நாள். 30.03.2017)
2) பேரூராட்சி, அரசாங்க நிலத்தில் அல்லது தெருவில் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தால் முன் அறிவிப்பின்றி ஆக்கிரமிப்பு பகுதி பேரூராட்சியால் அகற்றப்படும்
3) தெருவை அனுசரித்து போடப்பட்டிருக்கும் 1.30 மீட்டர் காலி இடம் விட்டு கட்டிடம் கட்ட வேண்டும். மேற்படி இடத்தில் படிகள் தவிர வேறு எந்த விதமான கட்டிடமும் கட்டக் கூடாது.
4) சாக்கடை மீது படிகள் மற்றும் இதர தடுப்புகள் ஏதுவும் கண்டிப்பாக கட்டக்கூடாது
5) கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது
6) அங்கீகாரம் செய்யப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதல் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாக இருந்தால் முன்கூட்டியே திருத்திய அனுமதி பெற்றுக் கொண்ட பிறகே கட்டிடம் கட்ட வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்துக்கு மாறுதலால் கட்டிடம் கட்டியது தெரியவந்தால் கட்டிடத்தினை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
7) கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் ஒரு பிரதி வைக்கப்படுவதுடன் பேரூராட்சி அலுவலரின் ஆய்வின் போது காண்பிக்க வேண்டும்
8) கழிப்பிடம், சாக்கடைத் தொட்டி முதலியன சுகாதார முறைப்படி தளம் போடப்பட்டும், எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான மார்க்கம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்
9) தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் பிரிவு எண் 26 மற்றும் 33ன்படி சுகாதாரச் சான்று பெறாமல் கட்டிடத்தில் குடியேறவோ அல்லது குடிவைக்கவோ கூடாது
10) 1920-ம் வருட தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 89-ன்படி கட்டிடம் கட்டி முடிந்த அல்லது குடியேறின 15 நாட்களுக்குள் அது விவரம் நிர்வாக அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதுடன் கட்டிடத்தில் முடிவான வரைப்படம் ஒரு பிரதியும் அனுப்பி வைக்க வேண்டும். கட்டிடத்திற்கு செலவான மொத்த தொகையும் தெரிவிக்க வேண்டும்.
11) கட்டிட வேலை தொடங்கும் முன் மின் இணைப்பு இருந்தால் அதை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்
12) நீரடிக்கழிப்பிடம் கட்ட வேண்டும் (நவீன கழிப்பிடம்)
13) எல்லைச்சுவர் தெரு மட்டத்திலிருந்து 1.52 மீட்டருக்கு மேல் கட்டக்கூடாது. தெரு பக்கமுள்ள கதவுகள் உட்புறம் திறக்கும்படி அமைக்கப்பட வேண்டும்
14) சமையல் அறை, குளிக்கும் அறை முதலியவைகள் வசதியாகவும், புகை வெளியேற கூண்டுகளும் கட்ட வேண்டும். காற்று வசதிக்கு வேண்டிய சன்னல் கதவுகள் அமைக்க வேண்டும்
15) மின்சார கம்பிக்கும், கட்டிடத்திற்கும் 1.75 மீட்டருக்கும் மேலாகவும், செங்குத்துக்கு 4.5 மீட்டருக்கு மேலாகவும் இருக்க வேண்டும்
16) கட்டிடத்தில் எழுத்து மூலமுள்ள அறிக்கையின்படி நிர்வாக அலுவலருக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டத்தின் கீழ் அல்லது தமிழ்நாடு மாவட்ட நல்வழி சட்டத்தின் கீழ் எவ்விதமான மாறுதலும் செய்வதற்கு உரிமையுண்டு

Executive Engineer
Project Implementation Division-II,
Tamil Nadu Slum Clearance Board,
Salem - 7.

த.பி.பா.

17) கட்டிடம் கட்டும் பொழுது கட்டிட நிலத்தின் வழியாக தண்ணீர் குழாய்களோ, சாக்கடை குழாய்களோ செல்வதைக் காணும் பட்சத்தில் தற்சமயம் வழங்கப்பட்டுள்ள உரிம அனுமதி முற்றிலும் செல்லாததாகும்
18) கட்டிட மனையில் காலியாகவுள்ள இடங்களில் மரங்கள் நடப்பட வேண்டும்
19) சொந்த செலவில் வடிகால் அமைத்து கட்டித்தின் கழிவுநீரை பேரூராட்சியின் சாக்கடையில் விழுமாறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்
20) இக்கட்டிட உரிமத்திற்கு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் இதர தகவல்கள் தவறாக இருப்பின் இவ்வுத்திரவு செல்லத்தக்கதல்ல
21) கட்டிடம் கட்டி முடிக்கப்படும்போது மழைநீர் சேகரிப்பு தொட்டி அவசியம் கட்டப்பட வேண்டும் இல்லாவிடில் சொத்து வரிவிதிப்பு செய்ய இயலாது
22) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டிட விதிகள் 17B ன்படி பேரூராட்சி பகுதிகளில் கட்டப்படும் 150 சதுர மீட்டர் பரப்பளவுடைய குடியிருப்பு மற்றும் இதர கட்டிடங்களுக்கு சூரிய ஒளியினை பயன்படுத்தி தண்ணீரை சூடாக்கும் உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டும்
23) மேற்படி குடியிருப்புக்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய் பதிப்பதற்கு பேரூராட்சியின் உதவி பொறியாளர் அவர்களின் மதிப்பீட்டின்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.
24) மேற்படி குடியிருப்புக்கு தெருவிளக்கு மின்வசதி செய்வதற்கு தமிழ்நாடு மின்வாரியத்தால் தெரிவிக்கப்படும் மதிப்பீடு தொகை செலுத்தப்பட வேண்டும்
25) கட்டிட பணிகள் முடிவுற்றபின் பொது திறவிடங்கள் மற்றும் சாலைகளை ஆலாம்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் செயல் அலுவலர், ஆலாம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி என்ற பெயரில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்து அசல் பத்திரம் பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
26) கட்டிடம் முடிவுற்ற பின் மேற்படி கட்டிடத்தை குடியிருப்பு பயன்பாட்டிற்கு கொண்டுவரும் முன் பொது சுகாதார துறையிடம் உரிய சான்று பெற்று கொள்ள வேண்டும்.
27) நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் உத்தரவு ந.க.எண். 1073/2020/நாம நாள்.13.01.2021ல் தெரிவித்துள்ள பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை பின்பற்ற வேண்டும்.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1) <u>As per Ministry of Environment, Forest and Climate change Notification, Dated. 22.12.2014. The Buildings Shall ensure sustainable environmental Management soild and liquid waste Management rain water harvesting and may use recycled materials such as fly ash bricks</u>
2) <u>As per G.O. (Ms) No. 161, H & UD Department, dated. 26.02.2013 "OSR Portion is earmarked as OSR and Kept open to sky without any construction</u>
3) கட்டுமானங்கள் நடைபெறும் இடத்தில் பொது மக்கள் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளின்படி தளப்பரப்பு விகிதம் (FSI) திறவிடங்கள் (Setbacks) வாகன நிறுத்தம் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்
4) G.O. Ms No. 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 04.02.2019ன்படி தெரிவித்துள்ள அனைத்து நிபந்தனைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும்
5) கட்டிடம் கட்டப்படும்போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்தாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்
6) தீயணைப்பு துறையின் தடையின்மை சான்று மற்றும் பொது பணித்துறையின் வாய்க்கால் குறித்து உரிய தடையின்மை சான்று பெறப்பட வேண்டும். பெறப்பட்ட பின் மேற்கண்ட துறையின் நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.

<u>பொது நிபந்தனைகள்</u>

1) உத்தேச கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்
2) மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்
3) தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைப்படத்திற்கு மாறாக கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் நகர்ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் அனுமதி பெற வேண்டும்
4) மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண். 138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 11.10.2002ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்
5) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும் உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்

Executive Engineer
Project Implementation Division-II,
Tamil Nadu Slum Clearance Board,

தபியா

6) Site Plan– ல் காட்டப்பட்டுள்ளவாறு வாகனம் நிறுத்துமிடம் நிலைநிறுத்தப்பட வேண்டும்
7) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
8) அரசாணை எண். 341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.1) நாள். 03.11.2004ன்படி செப்டிக் டேங்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்
9) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு "FLYASH BRICKS" மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்
10) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல் ) கட்டுமானங்கள் நடைபெறும் போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்
11) மத்திய மற்றும் மாநில அரசு துறையினரிடமிருந்து பெறப்பட்ட தடையின்மை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் கண்டிப்பாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.
12) தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டிட அனுமதியின் அடிப்படையில் இப்பேரூராட்சி தணிக்கையில் இழப்பு தொகை ஏற்படும் பட்சத்தில் அத்தொகையையும் செலுத்த வேண்டும்.
13) மேற்காணும் கட்டிடத்திற்கு மதிப்பீட்டில் 1% கட்டிட தொழிலாளர் நல வாரியத்திற்கு உரிய தலைப்பில் தங்கள் கட்டிடம் கட்டி முடிப்பதற்குள் செலுத்திவிட்டு அதன் நகல் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

**<u>இணைப்பு:</u>** அங்கீகரிக்கப்பட்ட வரைபட
நகல்கள்

5/2/21

செயல் அலுவலர்
ஆலாம்பாளையம் பேரூராட்சி
நாமக்கல் மாவட்டம்

பெறுநர்
நிர்வாக பொறியாளர்
தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
திட்ட அமலாக்கம், கோட்டம் – II,
சேலம் – 636 007

<u>நகல் –</u>
1) இருக்கை எழுத்தர், தொடர் நடவடிக்கைக்காக
2) அலுவலக கோப்புக்கு

Executive Engineer
Project Implementation Division-II,
Tamil Nadu Slum Clearance Board,
Salem-7.

## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate